**புதுச்சேரி அரசு**
**சமூகநலத்துறை**

எண் . 110/DSW/SK/2021-22 தேதி /08/2021

**ஏல அறிவிப்பு**

சமூக நலத் துறைக்கு சொந்தமான 4 மாமரங்கள் குத்தகைக்கு ஏலம் விடப்பட உள்ளன அதன் விவரம்

| **மா மரங்களின் எண்ணிக்கை** | **மரம் உள்ள இடம்** | **குத்தகை காலம்** |
|---|---|---|
| 4 | சமூகநலத்துறை | 09 .09. 2021 முதல் மூன்று மாத காலங்கள் அல்லது கனி தரும் பருவம் முடியும் வரை |

1.ஒப்பந்த விண்ணப்பப்படிவங்கள் ரூபாய் 50 செலுத்தி அலுவல நாட்களில் சமூக நலத்துறையில் 02/09/2021 முதல் அலுவலக நாட்களில் காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை பெறலாம் (உணவு இடைவேளை 1 முதல் 2 மணி வரை தவிர்த்து)

2. பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 08/09/ 2021 மதியம் 3 PM மணி வரை

3. 08/09/2021 அன்று மதியம் 3.30 PM மணி அளவில் ஏலம் நடைபெறும். ஏலம் நடைபெறும் தேதி தவிர்க்க முடியாத காரணத்தால் அரசாங்க விடுமுறையா இருப்பின் அதற்கு அடுத்த அலுவலக நாட்களில் அதே குறிப்பிட்ட நேரத்தில் ஏலம் விடப்படும் .

P. Padmavathy
4/9

**இயக்குனர்**
**சமூகநலத்துறை புதுச்சேரி**

# ஏல நிபந்தனைகள்

1. ஏல அறிவிப்பில் கண்டபடி பழம் மற்றும் பயன் தரும் மரங்கள் மகசூல் குத்தகைக்காகமூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் 08.09.2021 அன்று மாலை 3.00 மணிக்குள் சமூக நலத்துறையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்

2.ஒப்பந்த விண்ணப்பம் அனுப்பும் பொழுது உரையின் மீது மாமரங்கள் குத்தகை என்று தெளிவாக குறிப்பிடுதல் அவசியம் 08.09.2021 அன்று மாலை 3.30 மணி அளவில் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் ஒப்பந்தங்கள் பிரிக்கப்பட்டு உயர்ந்த பட்சதொகையை கோரி இருப்பவர் இயக்குனர் ஒப்புதல் அளித்தால் ஏலம் விடப்படும். தொகை குறைவாக இருப்பதாக கருதும் பட்சத்தில் ஒப்பந்ததாரர்கள் யார் அதிகமாக தொகை கோரி இருக்கிறார்களோ அதிலிருந்து பகிரங்க ஏலம் விடப்படும். காப்பு தொகையுடன் ஒப்பந்த விண்ணப்பங்கள் அளித்தவர்கள் மட்டுமே ஏலத்தில் பங்கு பெற முடியும்

3. ஏலம் எடுக்கும் பொழுது கூடி பேசுவதையோ அல்லது எவ்விதமான கலந்துரையாடல்களும் நிர்வாகம் அனுமதிக்காது

4. ஏலத்தை ஏற்றுக்கொள்வதற்கோ அல்லது காரணமில்லாமல் நிராகரிக்கவோ அல்லது நேரத்தை மாற்றி அமைக்கவோ இயக்குனருக்கு முழுஅதிகாரம் உண்டு

5. ஏலத்தில் வெற்றி பெற்றவர்கள் ஏலத்தொகையை முழுவதையும் ஏலம் எடுத்த 24 மணி நேரத்துக்குள் செலுத்திவிட வேண்டும்.

6. ஏலம் எடுத்தவர்கள் நிர்ணயித்த காலம் வரை மட்டுமே அனுபவிக்க உரிமை உண்டு குத்தகை எடுத்த மரங்களை சேதம் விளைவித்தால் அதற்குரிய தொகையை வசூலிப்பதோடு குத்தகையை ரத்து செய்ய முழு அதிகாரம் இயக்குனருக்கு உண்டு.

7. குத்தகை மகசூலில் ஏற்படும் இழப்பிற்கு நிர்வாகம் பொறுப்பேற்காது ஏலம் எடுத்த மரங்கள் அனைத்திற்கும் காவல் மற்றும் பாதுகாப்பிற்கும், பூச்சி மருந்துகள் அடிப்பதற்கு ஏலம் எடுத்தவர் தங்கள் சொந்த செலவில் ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.

8. ஏலம் எடுத்தவர் அலுவலக ஊழியர்களை எக்காரணம் கொண்டும் வேலை வாங்கக் கூடாது ஏலம் எடுத்த பொருட்களை அலுவலக வளாகத்தில் விற்பனை செய்யக்கூடாது

9. ஏலம் எடுத்தவருக்கு புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்கப்படும் அதற்கு ரூபாய் 50 செலுத்த வேண்டும்

10. ஏலம் எடுத்தவர் அறுவடை செய்ய ஆட்களை உள்ளே அழைத்துக் கொண்டு வரும்பொழுது மெயின் கேட் வழியாக மட்டுமே அழைத்து வர வேண்டும் மேலும் அலுவலகத்தில் உரிய அனுமதி பெற்று வரவேண்டும்.

11. அலுவலக நாட்களில் அலுவலக நேரங்களில் தான் ஏலம் எடுத்தவற்றை அறுவடை செய்து வெளியே எடுத்துச் செல்லவேண்டும் விடுமுறை நாட்களில் அறுவடை மற்றும் அறுவடை செய்த பொருட்களை வெளியில் எடுத்துச் செல்ல அனுமதி கிடையாது.

12. ஏலம் எடுத்தவர் பூச்சி மருந்துகள் அடிப்பதற்கு மற்றும் உரம் ஏதேனும் இடுவதற்கு முன் அலுவலகத்தில் தெளிவித்தல் அவசியம்.

D. Padmavathy 7/9

இயக்குனர்
சமூகநலத்துறை புதுச்சேரி